சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 166/2014

பெயர் திரு. ஆறுமுகம் நாள்.09.03.2026
த/பெ. ஆதிமூலம்

**1 முதல் 6 பிரதிவாதிகள் சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. முதல் பிரதிவாதிகளுக்கு தான் வழக்கு சொத்து சொந்தம் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். ராகவ் பிள்ளை தான் சொத்துக்களை விலை கொடுத்து வாங்கினார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மாமனார் தான் ராகவ பிள்ளை என்றால் சரிதான். ராகவ பிள்ளை எப்போது இறந்தார் என்று நியாபகம் இல்லை. 1970 ல் பாகம் பிரிந்ததாக கூறுவதற்கு ஆவணம் எழுதப்பட்டதா என்றால் எழுதப்பட்டது ஆனால் அதை யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. அந்த ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதில் யாரும் கையொப்பம் போடவில்லை. இருச பிள்ளை 2012 ல் இறந்து போனார்.

2. இருச பிள்ளை இறப்பதற்கு முன்பு பிரதிவாதிகள் இடையில் ஆவணம் ஏற்படுத்திக் கொண்டனரா என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்திக் கொண்டனர். இருச பிள்ளை மற்றும் அருணாச்சல பிள்ளை பாக பிரிவினை செய்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கில் ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. ராகவ பிள்ளையின் வாரிசுகள்

மொத்தம் 6 நபர்கள் என்றால் எனக்கு தெரியும். 1980 களில் சரிசமமாக பாகம் பிரிக்கும் பழக்கம் ஏதும் இல்லை. இருசு பிள்ளை இறப்பிற்கு முன்பு வழக்கு சொத்தை பொறுத்து எவ்வித ஆவணங்களும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கு தரப்பினர் அனைவரும் என் உறவினர்கள் தான். 1 முதல் 6 பிரதிவாதிகள் என் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பவுனம்மாள் திருமணம் ஆகி தன் கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**